IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.
C.C.NO.66/2025
DEPOSITION OF WITNESS P.W.6

| | | |
|---|---|---|
| NAME | : | BALAVENKATRAMAN |
| FATHER'S NAME | : | MUNUSAMY |
| VILLAGE | : | VELLORE |
| OCCUPATION | : | SI |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.08.2023 ம் தேதி காலை 11.30 மணிக்கு காட்பாடி உதவி ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது சரஸ்வதி க/பெ வரதராஜ், பெரியபுதூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார்மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.253/2023, சட்டப்பிரிவுகள் 379 இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதேநாள் பகல் 12.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ஹரி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே **அ.சா.ஆ.9** மற்றும் **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் ஹரி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பினனர் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையியல் இவ்வழக்கின் எதிரிகள் விரிஞ்சிபுரம் காவல்நிலைய குற்ற வழக்கில் ஈடுபட்ட சம்மந்தமாக வேலூர் கிராமிய வட்ட காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரணை செய்ததில் காட்பாடி காவல்நிலைய மேற்சொன்ன குற்ற எண் வழக்கிலும் ஈடுபட்டு உள்ளதாக கூறிய ஒப்புதல் வாக்குமூலம் அடிப்படையில் எதிரிகள் சுதாகர், அஜித் என்கின்ற அஜித்குமார் ஆகியோர்களை சம்பிரதாய கைது செய்தேன். விரிஞ்சிபுரம் காவல் நிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜரை படிவம்–91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் –91 **அ.சா.ஆ.11 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது 379 இதச வின் படி 10.10.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சொன்ன நேரத்தில், தேதியில் சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 15.06.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,

காட்பாடி.